இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 04-04-2025

# கச்சத்தீவை மீட்போம்; மீனவர்களைக் காப்போம்

தமிழ்நாடு சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றிக் காட்டி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். கச்சத்தீவை மீட்போம் என்ற தீர்மானமானது தமிழ்நாட்டின் உரிமையைக் காப்போம், மீனவர்களைக் காப்போம் என்ற உள்ளடக்கங்களைக் கொண்டது ஆகும். இந்தத் தீர்மானத்தை அனைத்துக்கட்சிகளும்-அ.தி.மு.க.,பா.ஜ.க.உள்பட-ஆதரித்துள்ளார்கள். தமிழ்நாட்டின் ஒட்டுமொத்தக் குரலாக இது அமைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி மலர்ந்தது முதல், 'கச்சத்தீவை மீட்போம்' என்ற குரலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து ஒலித்து வருகிறார்கள். பிரதமர் மோடியை மேடையில் வைத்துக் கொண்டே தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.5.2022 அன்று கோரிக்கை வைத்தார். "கச்சத்தீவை மீட்டுத் தரவேண்டும்" என்று 31.3.2022 அன்று பிரதமரை அவரது இல்லத்தில் சந்தித்து முதலமைச்சர் மனுக் கொடுத்தார். "இலங்கை அதிபர் உங்களைச் சந்திக்க வருகிறார், அவரிடம் கச்சத்தீவு பிரச்சினையை எழுப்ப வேண்டும்" என்று 20.8.2023 அன்று பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் அனுப்பினார். இதன் தொடர்ச்சியாகத்தான் கச்சத்தீவு மீட்புத் தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றினார்கள்.

தீர்மானத்தை ஆதரித்த அ.தி.மு.க., வழக்கம் போல 'நீங்கள் தான் கச்சத்தீவை தாரை வார்த்தீர்கள்' என்றும் குற்றம் சாட்டியது. 'கச்சத்தீவை ஒப்படைக்கக் கூடாது' என்று அன்றைய பிரதமருக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கடிதம் எழுதினார்கள். தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சிக் கூட்டம் (29.6.1974) கூட்டி கண்டனத் தீர்மானம் நிறைவேற்றினார்கள். சட்டமன்றத்தில் தீர்மானம் (21.8.1974) நிறைவேற்றினார்கள்.

கச்சத்தீவு ஒப்பந்தம் என்பதே இரண்டு ஒப்பந்தங்கள் ஆகும். முதல் ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டு போடப்பட்டது. இந்த ஒப்பந்தப்படி மீன்பிடிக்க உரிமை உண்டு. இரண்டாவது ஒப்பந்தம் 1976 ஆம் ஆண்டு போடப்பட்டது. அப்போது தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு இல்லை. இந்த ஒப்பந்தத்தில் தான் 'மீன் பிடிக்க உரிமை இல்லை' என்பது சேர்க்கப்பட்டது.

**கச்சத்தீவு விவகாரத்தை நீர்த்துப் போக வைத்தவரே ஜெயலலிதாதான்.**

★ **20.4.1992 அன்று சட்டப் பேரவையில் பேசிய முதல்வர் ஜெயலலிதா, "கச்சத் தீவை மீட்பது என்பது விரைவில் நடக்கக் கூடிய, நடைபெறக் கூடிய ஒன்றாகத் தெரியவில்லை" என்று குறிப்பிட்டார். அது ஏதோ முடிந்து போன விவகாரம் போல ஜெயலலிதா சொன்னார்.**

★ **30.9.1994 அன்று பிரதமர் நரசிம்மராவுக்கு முதலமைச்சர் ஜெயலலிதா ஒரு கடிதம் எழுதினார். அதில், "The coding of this tiny island to the Island Nation has been done by the Govern ment of India in the interest of better bilateral relations" என குறிப்பிட்டிருக்கிறார். அதாவது 'தீவு நாடான இலங்கைக்கு, இந்தச் சின்னஞ் சிறிய தீவினை (கச்சத்தீவை) இந்திய அரசு பிரித்துக் கொடுத்தது, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலே நல்லுறவு நிலவிட வேண்டும் என்பதற்காகத்தான்' எனச் சொன்னவர் ஜெயலலிதா.**

★ **23.7.2003 அன்று பிரதமர் வாஜ்பாய்க்கு முதலமைச்சர் ஜெயலலிதா எழுதிய கடிதத்தில், இந்தியா, இலங்கை ஆகிய இருநாடுகளுக்கிடையே நல்லுறவு பேணவும், தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக அனுபவித்து வரும் உரிமைகளைக் காப்பாற்றவும் உள்ள ஒரேவழி என்று குறிப்பிட்டுவிட்டு மேலும், "The best possi ble solution is to get the island of Katchatheevu and adjacent seas on lease in perpetuity solely for fishing, drying of nets and pilgrimage. Sri Lanka's Sovereignty over Katchatheevu could be upheld at the same time" -அதாவது கச்சத் தீவையும், அதற்கு அருகிலே உள்ள கடல் பகுதிகளையும் தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதற்கும், வலைகளைக் காய வைப்பதற்கும், யாத்திரை செல்வதற்கும் நிரந்தரக் குத்தகைக்குப் பெறலாம்; அதே நேரத்தில் கச்சத்தீவில் இலங்கை நாட்டுக்குள்ள இறையாண்மையை ஏற்றுக் கொள்ளலாம்" என்று சொல்லியிருக்கிறார். அவருக்கு மீனவர் நலனை விட, இலங்கை இறையாண்மைதான் முக்கியமாக இருக்கிறது. கச்சத்தீவு மீட்பை, குத்தகைக்குப் பெறுவதாகச் சுருக்கியவர் ஜெயலலிதா.**

சொந்தக் கட்சிக்காரர்கள் என்ன செய்கிறார்கள் என்பதையே அறியாத பழனிசாமிக்கு இதெல்லாம் தெரியுமா?

கச்சத்தீவு பிரச்சினையில் தி.மு.க. நாடகம் ஆடுவதாக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை சொல்லி இருக்கிறார். கபட நாடகங்கள் நடத்துவதில் கைதேர்ந்தவர் அண்ணாமலைதான் என்பதை அவரது கட்சியினரே நன்கு அறிவார்கள்.

பா.ஜ.க. அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் 2014 ஆம் ஆண்டு சூலை மாதம் 1 ஆம் தேதி தாக்கல் செய்த மனுவில், '1974 ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 6 இன் படி இந்திய மீனவர்கள் கச்சத்தீவு கடல் பகுதியில் மீன்பிடிக்க உரிமை இல்லை. கச்சத்தீவு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு எந்தப் பாரம்பர்ய உரிமையும் இல்லை' என்று சொல்லப்பட்டது. அதே மனுவில், 'இந்தியா மற்றும் இலங்கை இடையிலான கடல் எல்லை விவகாரம் முடிந்து போன ஒன்று' என்று சொல்லியதும் பா.ஜ.க. அரசு தான்.

**கச்சத்தீவை மீட்பதற்காக 2014 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இந்த 11 ஆண்டு காலத்தில் பிரதமர் நரேந்திர மோடி அரசு செய்த ஒரே ஒரு செயலைக் காட்டச் சொல்லுங்கள். "கச்சத்தீவு எங்களுக்குச் சொந்தமானது, அதனை திருப்பிக் கொடுத்து விடுங்கள்" என்று ஒரே ஒரு கடிதத்தையாவது பிரதமர் மோடி, இலங்கை அரசுக்கு எழுதி இருக்கிறாரா?**

அ.தி.மு.க. - பா.ஜ.க.வின் கபட நாடகங்களை மக்கள் அறிவார்கள்.

●●



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (3.4.2025) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள் சந்தித்து, 2025-2026 ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கூடுதல் தலைமைச் செயலாளர் /வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் மு.சாய்குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, பேரிடர் மேலாண்மை ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், நில சீர்திருத்த ஆணையர் டி.என். ஹரிஹரன், நில நிர்வாக ஆணையர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி, வருவாய் நிருவாக கூடுதல் ஆணையர் டாக்டர் எஸ். நடராஜன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சிறப்புச் செயலாளர் சு. கணேஷ், நில அளவை மற்றும் நிலவரி திட்ட இயக்குநர் பி. மதுசூதன் ரெட்டி, சமூக பாதுகாப்பு திட்ட இயக்குநர் கே.வி. முரளிதரன், நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி இயக்குநர் அ. சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.4.2025) பள்ளிக்கல்வித்துறையின் "நம்ம ஸ்கூல், நம்ம ஊரு பள்ளி திட்டத்தின்" கீழ் திருவல்லிக்கேணி லேடி வில்லிங்டன் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில், வெர்சுசா நிறுவனத்தின் சமூக பங்களிப்பு நிதியின் மூலம் கட்டப்பட்ட ஒருங்கிணைந்த அறிவியல் ஆய்வகங்களை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மருத்துவர். பி. சந்தர மோகன், பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர். ச.கண்ணப்பன், வெர்சுசா அறக்கட்டளையின் துணை செயல் தலைவர் வெங்கடேசன் விஜயராகவன் உள்பட அரசு உயர் அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

### கச்சத்தீவை இலங்கைக்கு வழங்கியது –

# இந்திய அரசியல் சட்டத்திற்கு முற்றிலும் எதிரானது!

## கச்சத்தீவை உடனே மீட்க வலியுறுத்தி – மக்களவையில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஏப். 4-

1974 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் ஒப்புதல் இல்லாமலேயே கச்சத்தீவை இந்திய அரசு இலங் கைக்கு இருநாடுகள் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் வாயிலாகத் தாரை வார்க்கப் பட்டது. கச்சத்தீவு தமிழ் நாட்டின் கைவிட்டுப் போன பிறகு தமிழக மீனவர்கள் கச்சத்தீவு கடல் பகுதிக்கு மீன்பிடிக்க செல்ல போகும் போதெல்லாம் அவர்கள் எல்லை தாண்டி மீன் பிடிப்பதாகக் கூறி அவர் களைக் கைது செய்து சிறைகளில் அடைப்பதையும் படகுகள், மீன்கள் உள்ளிட்ட உடைமைகளை கைப் பற்றிச் செல்வதும் தொடர்கதை ஆகி விட்டது. அண்மைக் காலங்களில் தமிழக மீனவர்கள் மீதான தாக்கு தல்களும் சிறைவைப்பு போன்ற தண்டனைகளும் அதிகமாகி விட்ட நிலையில் கச்சத்தீவை மீட்பது ஒன்றே இந்த நெடுநாள் சிக்கலுக்கு நிரந்தர த் தீர்வு என்ற குரல் தமிழ் நாடு மீனவசமுதாய மக்கள் மட்டு மல்லாமல் அரசியல் கட்சிகளிடமி ருந்தும் உரக்க ஒலித்து வருகிறது.

இந்நிலையில் நேற்று (3.4.2025) திமுக மக்களவைக் குழுத்தலைவர் டி.ஆர்.பாலு கச்சத் தீவு தொடர்பான பிரச்சனையை நாடாளுமன்றத்தில் எழுப்பினார். 1974ல் இந்திய அரசு, கச்சத்தீவை



இலங்கைக்கு நாடாளுமன்றத்தின் முன் ஒப்புதல் பெறாமல் கொடுத்தது இந்திய நாட்டின் அரசியலமைப்பு சட் டத்துக்கு எதிரான செயல் என்பதால் கச்சத்தீவை உடனடியாகத் திரும்ப ப் பெற வேண்டும் என்று தனது பேச் சில் டி.ஆர் பாலு வலியுறுத்தினார்.

தி.மு.க. மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்களின் உரையின் விவரம் வருமாறு:

இன்று தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.க. ஸ்டாலின் அவர்க ளால் முன்மொழியப்பட்ட கச்சத்தீவு அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிராக இலங்கைக்கு விட்டுக் கொடுக்கப் பட்ட விஷயம் சம்பந்தப்பட்ட தனித் தீர்மானம் தமிழ்நாடு சட்டப் பேரவையால் நிறைவேற்றப் பட்டது.

கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்ட செயல் அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதமானது என்று ஏன் சொல்கி றேன் ? இலங்கை அரசுக்கும் இந் திய அரசுகக்கும் இடையே 1974 ல் இருநாடுகளின் இடையிலான சர்வ தேச கடல் எல்லைக் கோடு (இன்டர் நேஷனல் மேரிட்டைம் பவுண்டரி லைன்) தொடர்பாக ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. பின், 1976 ஆம் ஆண்டில் இருநாட்டுக் கடல் எல் லைக் கோட்டின் புள்ளிகள் உறுதி செய்ய ப்பட்ட மேலும் ஒரு ஒப்பந்தம் இருநாடுகளிடையே ஏற்கப் பட்டது. ஆனால், இவ்விரு ஒப்பந்தங்களி லும் தமிழ்நாடு அரசுக்கு எந்தப் பங் கும் இல்லை.

**உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு!**

இந்தப் பிரச்சனை குறித்து மேற்கொண்டு எந்த க் கருத்தையும் சொல்வதற்கு முன்னால் ஒரு உண்மை பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அன்றைய பாகிஸ் தானுக்கு மேற்குவங்கத்தில் உள்ள பேருபாரி பகுதியின் நிலப்பரப்பை மாற்றுவது தொடர்பான வழக்கில் 1960 ஆம் ஆண்டில் இந்திய உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் இந்திய நிலப்பகுதியை வேறு நாட்டுக்கு நாடாளுமன்றத்தின் அனு மதி இல்லாமல் கொடுக்க முடியாது என்று கூறியுள்ளது.

1976 ல் மேற்கொள்ளப் பட்ட ஒப் பந்தத்தின் படி கச்சத்தீவு இலங் கைக்கு விட்டுக் கொடுக்கப் பட்ட போது தமிழ்நாடு குடியரசுத் தலை வர் ஆட்சியில் இருந்த நிலையில் தமிழ்நாடு அரசுடன் கலந்தாலோசிக் கப் படவில்லை. மேலும் நாடாளு மன்ற ஒப்புதலும் பெறப்பட வில்லை. அதனால்தான் கச்சத்தீவை இலங் கைக்கு விட்டுக் கொடுத்த நடவ டிக்கை அரசியல் சாசனத்துக்கு விரோதமானது என்று குறிப்பிட்டுக் கூறுகிறேன்.

தலைவர் அவர்களே! கச்சத்தீவு என்பது தமிழக மீனவர்களின் வாழ் வாதாரமாக அன்றாட உயிர் பிழைப் புக்கு ஆதாரமானது. சம்பந்தப்பட்ட அமைச்சர் இங்கே அவையில் உள் ளார். அவர் இந்த விவரங்களை எல் லாம் வெளியுறவு அமைச்சருக்கும் பிரதமர் மோடி அவர்களுக்கும் விளக்கிட வேண்டும். கச்சத்தீவை மீட்க விரைவான நடவடிக்கை களை எடுக்க உதவிட வேண்டும்."

இவ்வாறு திமுக பொருளாளரும் கழக மக்களவைக் குழுத் தலைவரு மான டி.ஆர்.பாலு தனது உரையில் ஆணித்தரமாக வலியுறுத்தினார்.

### 'சென்னையில் காரல் மார்க்ஸ் சிலை திறக்கப்படும்' எனும்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு மிகச் சிறப்பு - மிகப் பொருத்தம்!

## முதல்வரைப் பாராட்டி – விடுதலை இராஜேந்திரன் அறிக்கை!


**சென்னை, ஏப். 4 -**

**"சென்னையில் காரல் மார்க்ஸ் சிலை, அரசின் சார்பில் திறக்கப்படும் எனும் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர் களின் அறிவிப்பு மிகச் சிறப்பா னது, மிகப் பொருத்தமானது" என்று விடுதலை இராஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் காரல் மார்க்ஸ் சிலை திறக்கப்படும் என்று திராவிட மாடல் முதல் வர் ஸ்டாலின் அறிவித்திருக் கிறார்!

சோவியத் சோஷலிச ஆட் சிக்கு எதிரான உள்நாட்டு எதிர்ப்பு புரட்சிகளை உறுதி



யாக அடக்கியவர் ஸ்டாலின்! பெரியார் இயக்கம் ஸ்டாலின் தலைமையிலான சோவியத் ரஷ்யாவை உறுதியாக ஆத ரித்தது, அதன் நினைவாகத் தான் கலைஞர் தனது மகனுக்கு 'ஸ்டாலின்' என்று பெயர் சூட்டினார்.

சோவியத் பயணம் மேற் கொண்ட பெரியார், ஸ்டாலின் பங்கேற்ற மே தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்!

சுயமரியாதை இயக்கம் தோன்றிய காலகட்டத்தில் தான் ஸ்டாலின் அதிபர் பதவிக்கு வந்தார்.

எதிர்ப் புரட்சிகளை முறிய டித்து சோவியத்தில் சோசியலி சத்தை உறுதிப்படுத்திய ஸ்டாலின் பெயரை த் தாங்கி நிற்கும் உலகின் ஒரே முதல் வர் திராவிட ஆட்சியின் முதல் வர் தான்!

காரல் மார்க்சின் சிலையைத்



திறந்து வைக்கும் அறிவிப்பை ஸ்டாலின் வெளியிட்டு இருப் பது மிகச் சிறப்பு: மிகப் பொருத் தம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் விடுதலை இராஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.